Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy one years.

Vol. 71 கர்த்தாவே, என்னை நியாயம் விசாரியும், நான் என் உத்தமத்திலே நடக்கிறேன் சங்.26:1 பெப்ரவரி 2025 No.2

தேவனைப் பற்றிக் கொண்டு ஜெபத்தில் முன்னேறு

Press on - Hold on in Prayer

E.M.Bounds (1835 - 1913)

உத்தமமான ஜெபத்தில் கெஞ்சிக் கேட்குதலை ஒரு பிரத்தியேகமான குணாதிசயமாகக் கிறிஸ்து தந்திருக்கிறார். நாம் ஜெபித்தால் மட்டும் போதாது அதிக அவசரத்தோடும் கருத்தோடும் மறுபடியும் மறுபடியும் ஜெபிக்க வேண்டும். ஜெபத்தில் சோர்ந்து போகக்கூடாது. உத்தமமாகவும் ஆழ்ந்த கருத்தோடும் ஜெபிக்க வேண்டும். ஏனெனில் இயேசு கிறிஸ்து தெளிவாகவே ஜெபத்தின் இரகசியமும் அதன் வெற்றியும் அதன் அவசரத்தின் அடிப்படையிலிருப்பதாகக் கூறியுள்ளார்.

நேர்த்தியானதும், மனதை உருக்குவதும், எளிமையுமான ஒரு உவமையில் ஆண்டவராகிய இயேசு மக்கள் ஜெபிக்கும்போது முழுமனதோடு ஜெபிக்கவும் வலுவான சக்தியோடும் தைரியமுள்ள இருதயங்களோடும் ஜெபிக்க போதித்தார்.

லூக்.18:1-8 நன்கு படிக்க.

நமது உதவியற்ற நிலைகளில்

இந்த ஏழைப் பெண்ணின் நிலை மிக நம்பிக்கையற்றதாயிருந்தது. ஆனால் கெஞ்சிக் கேட்குதல் நிபந்தனையின்றி வெற்றியைத் தருகிறது. சோர்பற்ற, பயமற்ற கெஞ்சுதல் எல்லா ஏமாற்றமான நிலையிலும் வெற்றி பெறுகிறது என்பதை இந்த நிகழ்விலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

இந்த உவமைக்கு முன்பாக முகவுரையில்: "சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ண வேண்டும்" என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார். அவருக்கு மக்கள் எளிதில் சோர்ந்து போய் விடுவார்கள் என்பது தெரியும். எனவே கெஞ்சிக் கேட்பதால் அற்புதமான வலிமையைப் பெறலாம் என்பதை இதன்மூலம் அவர் விளக்கினார்.

அந்த விதவை பெலவீனமான வளும் உதவியற்றவளுமாயிருந்தாள். ஒரு அநீதியுள்ள நியாயாதிபதியின் தாக்கத்தைப் பெற முடியாதவளாயிருந்தாள். ஆனாலும் அவளது சோர்பற்ற தொந்தரவு கொடுக்கும் கெஞ்சுதல் அவள் நியாயம் பெற உதவியது. இவ்வாறு மிக ஆழமாகவும் வசீகரமாகவும் வருந்திக் கேட்பதின் வலிமையும் முக்கியத்துவமும் இந்த உவமையில் வெளிப்படுத்தப்படுகிறது. இது எல்லாத் தடைகளையும் நீக்குவதும் எதிர்க்கும் விசைகளையெல்லாம் மேற்கொள்ளுவதுமாயிருக்கிறது. ஜெபமில்லாமல் நாம் எதையுமே செய்ய இயலாது. இத்தகைய ஜெபம் எல்லாவற்றையும் தரக்கூடியது. அதுவே இயேசுவின் போதனை.

இதே சத்தியத்தை வெளிப்படுத்தும் இன்னொரு உவமையையும் இயேசு கூறியிருக்கிறார். ஒரு மனிதன் பாதி இராத்திரியிலே தன் சினேகிதனிடம் அப்பம் கடனாகக் கேட்கச் செல்லுகிறான். அவன் சினேகிதனுக்காக சினேகிதன் என்ற அடிப்படையில் இந்தத் தேவையின் வேண்டுதல் தர்ம சங்கடமான நிலையும் நிர்ப்பந்தமான தாகவுமிருந்தது. ஆனாலும் சினேகிதனுக்கு எழும்புவதும் கொடுப்பதும் முடியாததாயிருந்தது. ஆனால் இவனோ காத்திருந்து வலுக்கட்டாயமாகப் பெற்றுக் கொள்கிறான். இவ்விதமான தொந்தரவு செய்து கேட்பது வேறு வழிகளைவிட பெற்றுக் கொள்வதற்கு மிகவும் ஏதுவாயிருக்கிறது.

சிரபோனிக்கே பெண்ணின் சம்பவம் முக்கியமானது. அவர் யாரையும் பார்க்கமாட்டார் என்ற செய்தி தான் அவளுக்குக் கிடைத்தது. நிர்விசாரமாக அவரது சமூகத்தில் அவள் நடத்தப் பட்டாள். அவள் மேல் கரிசனையில்லாதது போன்ற குளிர்ச்சியும் அமைதலும் நிலவியபோதும் அவள் அவரை நெருங்கினாள். பிள்ளைகளுடைய அப்பத்தை நாய்க்குட்டிகளுக்குப் போட முடியாது என்ற மனதை நொறுக்கும் வார்த்தைகளுக்கும் அஞ்சாமல் இவைகளை ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு தனது தாழ்மையான பயமற்ற மேற்கொள்ள முடியாத தொந்தரவு பண்ணும் தன்மையால் வெற்றி பெறுகிறாள். மனுஷகுமாரன் அவளது மேற்கொள்ள முடியாத தொந்தரவால் இவ்வாறு கூறுகிறார்: "ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக் கடவது என்றார்" *மத்.15:28*

விசுவாசத்தின் மிகப்பெரிய தொந்தரவிற்கு இயேசுகிறிஸ்து தம்மை அர்ப்பணிக்கிறார். "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாம லிருப்பாரோ?" *லூக்.18:7*

ஜெபத்திற்குரிய நிபந்தனைகளில் தொந்தரவு செய்யும் திறமை ஒரு முக்கிய பகுதியாக இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார். சிரொபெனிக்கேயா ஸ்திரீயின் ஜெபம் தொந்தரவு செய்தலின் இணையற்ற வலிமையைக் காண்பிக்கிறது. இது பூர்வீக ஒலிம்பிக் விளையாட்டு வீரர்களில் காணப்பட்ட வலுவான சக்தி, பொறுமை மற்றும் உயரிய பண்புகளை விட மேலானது.

இவ்வித தொந்தரவு செய்தலின் முதற்பாடம் மலைப்பிரசங்கத்தில் போதிக்கப்பட்டது- "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" இவை யெல்லாம் முன்னேற்றபடிகள். "ஏனெனில் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான், தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" *மத்.7:7,8.*

இடைவிடாமல் ஜெபிக்காவிடில் ஜெபம் பதில் தருவதில்லை. தொந்தரவு செய்வது என்பது பற்றிக்கொள்வதும், விடாது தொடர்வதும், காத்திருப்பதும் இளைப்படையாமலிருப்பதுமாகும். இளைப்படையாமல் பற்றிக்கொண்டு சோர்ந்து போகாமல் வாஞ்சித்து, பொறுமையோடிருக்க வேண்டும். முக்கியமான ஜெபம் என்பது ஒரு சம்பவமல்ல, அது முக்கியமானது. அது காட்சி அல்ல அது ஒரு ஆர்வம். அது ஒரு தேவைமட்டுமல்ல இன்றியமையாதது.

ஜெபம் மிக உயரியதும் சிறப்பான வெற்றியைத் தருவதும், தேவனோடு போராடும் ஒரு போராட்ட வீரரின் மனநிலையைத் தரும் ஒன்றாகும். அது விசுவாசத்தின் போட்டி, சோதனை மற்றும் வெற்றி எனக் கூறலாம். இந்த வெற்றி ஒரு பகைஞனிடமிருந்து பெறப்படுவது அல்ல. நமது விசுவாசத்தைப் பெரிதுபடுத்த தேவன் கொடுக்கும் சோதனை. அது நம்மை சோதித்து நமது பெலனை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது. விரைவானதும் நிலையானதுமான வலுவை ஆத்துமாவுக்கு தொந்தரவு பண்ணும் ஜெபத்தைப் போல எதுவும் செய்வதில்லை. அது ஒரு அனுபவத்தையும், யுகத்தையும் ஒரு நாள்காட்டியையும் ஆவியில் ஏற்படுத்தி மார்க்கத்தில் ஒரு புது வாழ்வை உண்டுபண்ணி இராணுவ வீரனைப் போன்ற ஒரு பயிற்சியை அளிக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும் போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன் ஏசா. 41:17.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

வாசகர் கடிதம்

07-01-25 Perumalpuram,

Bro,

நீங்கள் செய்து வரும் ஊழியங்களுக்காக ஜெபிக்கிறேன். ONLINE-மூலமாக Rs.500/- அனுப்பி இருக்கிறோம்.

எங்கள் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக ஜெபியுங்கள். நீங்கள் செய்து வரும் மகிமையான ஊழியங்களுக்காக ஜெபிக் கிறோம். புதிய ஆண்டிலே சுகத்தையும் பெலத்தையும் தீர்க்கா யுசையும் தேவன் அருளிச்செய்வாராக! பரலோக ஆசீர்வாதங் களையும் இகபர நன்மைகளையும் தந்து ஆசீர்வதிப்பாராக! நன்றி

அன்புடன், P.K.J., TN 01607 Y

2025 பெப்ரவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர் தானோ என்று கேட்டான் லூக்கா 13:23.

கர்த்தருக்குச் சித்தமானால், இந்த சீஷனின் கேள் விக்கு, ஆண்டவராகிய இயேசு சொன்ன பதிலை அடுத்த மாதம் எழுதுவேன். இம்மாதம் ***இரட்சிப்பு*** என்றால் என்ன என்று எழுதுகிறேன்.

இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தல ரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்.

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளை களுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி,

இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறு பாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்.

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்.

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்து மாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபை களின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவி யையும் பொழிந்தருளும், ஆமென். ரோ.8:26; எபி.5:7; சகரியா12:10.

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் அப்.2:37-42.

1. மனந்திரும்புங்கள் அப். 2:38

அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து:

மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான் மத்.3:1,2.

அதுமுதல் இயேசு: **மனந்திரும்புங்கள்,** பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் மத்.4:17.

எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்:

ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு.

ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தா யென்பதை நினைத்து, **மனந்திரும்பி,** ஆதியில் செய்த கிரியை களைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ **மனந்திரும்பாத பட்சத்தில்,** உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் வெளி.2:1-7.

2. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப். 2:38

மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும், வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிற பிரகாரம்,

அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் போய், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற **ஞானஸ்நானத்தைக்** குறித்துப் பிரசங்கித்தான் லூக்கா 3:5,6.

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : WESLEY DEVADASON, A/c. No. : 2131010118439
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : PUNB0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : WESLEY DEVADASON, A/c. No. : 370601000002557
I.O.B., Nagercoil-1 IFSC Code : IOBA0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : WESLEY DEVADASON, A/c. No. : 61822200136904
Canara Bank, Ngl-1 IFSC Code : CNRB0001110

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனங்களெல்லாரும் **ஞானஸ்நானம்** பெற்ற போது, இயேசுவும் **ஞானஸ்நானம்** பெற்று, ஜெபம் பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது;

பரிசுத்த ஆவியானவர் ரூபங் கொண்டு புறாவைப் போல அவர் மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார் லூக்கா 3:21-23.

இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் **ஞானஸ்நானம்** பெறுகிறதற்குத் தடை யென்ன என்றான்.

அதற்கு பிலிப்பு: நீர் முழு இருத யத்தோடும் விசுவாசித்தால் தடை யில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக் கிறேன் என்று சொல்லி;

இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கி னார்கள்; பிலிப்பு அவனுக்கு **ஞானஸ்நானம்** கொடுத்தான் அப்.8:36-38.

3. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் அப்.2:38

சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்.

இவர்கள் வந்தபொழுது அவர் களில் ஒருவனும் **பரிசுத்த ஆவியைப்** பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,

அவர்கள் **பரிசுத்த ஆவியைப்** பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி,

அவர்கள் மேல் கைகளை வைத் தார்கள், அப்பொழுது அவர்கள் **பரிசுத்த ஆவியைப்** பெற்றார்கள் அப்.8:14-17.

இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் **பரிசுத்த ஆவியானவர்** இறங்கினார்.

அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிற தையும்,

பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, **பரிசுத்த ஆவியின்** வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப் பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்.

அப்பொழுது பேதுரு: நம்மைப் போலப் **பரிசுத்தஆவியைப்** பெற்ற இவர் களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,

கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள் அப்.10:44-48.

4. மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் அப்.2:40

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

எல்லாவற்றையும் முறுமுறுப் பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் பிலிப். 2:15,16.

உலக சிநேகம் தேவனுக்கு விரோ தமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனா யிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் யாக்.4:4.

உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை 1 யோ.2:15.

5. அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்யோந்யத்திலும், அப்பம் பிட்குதலிலும் இருங்கள் அப்.2:42

உபதேசம் : அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்ட பொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்.

அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள் யோ. 6:60,66.

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் யோ. 8:31,32.

அந்நியோந்நியம் : விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார் கள் அப்.4:32.

அப்பம் பிட்குதல் : அவர்கள் ஒருமனப் பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி,

தேவனைத் துதித்து, ஜனங்க ளெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந் தார்கள். **இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்** அப். 2:46,47.

ஜெபம் மிக உயரியதும் சிறப்பான வெற்றியைத் தருவதும், தேவனோடு போராடும் ஒரு போராட்ட வீரரின் மனநிலையைத் தரும் ஒன்றாகும்.

6. ஜெபம் பண்ணுங்கள் அப்.2:42

முதலாவது ஒரு அழகான ஜெப பாடலை எழுதுகிறேன், பாடி ஜெபி யுங்கள்.

ஜெபத்தை கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

1. ஊக்கத்துடனே ஓர்முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்யும்

2. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சளைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்பேன்

ஆண்டவராகிய இயேசு சொல்லுகிறார்:

1. சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் லூக்கா 18:1.
2. நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் மத்.26:41.
3. ...பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் லூக்கா 21:36.
4. தனித்து ஜெபம் பண்ண வேண்டும் மத்.14:23.
5. குடும்பமாய் ஜெபம் பண்ண வேண்டும் அப்.10:2.
6. சபையாக ஜெபிக்க வேண்டும் அப்.12:5.
7. ஜெப வேளையில் ஜெபிக்க வேண்டும் அப்.3:1.

அவர்கள் அதைக்கேட்டு, ஒரு மனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு: கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவை களிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்.

உம்முடைய பரிசுத்த பிள்ளை யாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத் தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள்.

அவர்கள் ஜெபம் பண்ணின போது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள் அப். 4:24 முதல் 31 வரை.

அப்படியே பேதுரு சிறைச் சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணி னார்கள்.

அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது.

அவன் இப்படி நிச்சயித்துக் கொண்டு, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் அப்.12:5 முதல் 12 வரை.

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும் படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று அப். 16:25,26.

இந்த செய்தியை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளைகளே, அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக, நம் இந்திய தேசத்திற்காக, பாவின பாவ தொழில் செய்கிறவர்களுக்காக ஒரு மணிநேரம் கதறி அழுது கண்ணீர் விட்டு ஜெபிப்பீர்களா?

எந்தன் ஜெபவேளை உமைத் தேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்

1. சோராது ஜெபித்திட
ஜெப ஆவி வரம் தாருமே
தடை யாவும் அகற்றிடுமே
தயை வேண்டி உம் பாதம் வந்தேன்

2. உம்மோடு எந்நாளும்
உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை
கேட்டிட காத்திருப்பேனே

3. நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்தனை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கின்றேன் நாதா

7. உறுதியாய் தரித்திருங்கள் அப்.2:42

என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் மத்.10:22.

அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.

முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் மத்.24:12,13

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

Revival . . .

I believe that the answer to the Revival for this day is in joel's prophecy. "Let the priests, the ministers of the LORD weep." O for some more Jeremiahs! We have too many Obadiahs who want to live in comfort and safety in the king's house.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வமுள்ளதும், அவசரமானதும், அனல் வீசுகிறதுமானதும்.

உயரிய ஆவிக்குரிய முயற்சி வெளிப்படுவதால் உயரிய ஆவிக்குரிய நன்மை பெறப்படுகிறது என்பதை வேதபுத்தகம் பல திருஷ்டாந்தங்கள் மூலம் வற்புறுத்துகிறது. பெலவீனமான ஆசைகளுக்கும் கவலையீன முயற்சிகளுக்கும் வேதபுத்தக மார்க்கத்தில் இடமேயில்லை. நமது முயற்சிகள் யாவும் விடாமுயற்சியுடனும், ஆர்வத்துடனும், அவசரத்துடனும் அனல் வீசும் வகையிலும் இருக்க வேண்டும். பற்றி எரியும் ஆசைகளும், உணர்ச்சியைத் தட்டி எழுப்பும், களைப்பற்ற அழுத்தங்களும் பரலோகத்தை சந்தோஷப்படுத்துகின்றன. தேவன் தமது பிள்ளைகள் தவறற்ற உத்தமர்களாகவும் மிகமிக தைரியமுள்ள முயற்சியாளர்களாகவும் இருக்க விரும்புகிறார். அரைகுறை மனதோடு ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்கு பரலோகம் கவனம் செலுத்துவதில்லை.

நம் முழுமையும் ஜெபத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஜான் நாக்ஸ் என்ற பக்தனைப் போல 'தேவனே ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும் இல்லாவிட்டால் நான் சாகட்டும்' என்று ஜெபிக்கும் உணர்வு நமக்கு வேண்டும். நமது அனுபவமும் தேவ வெளிப்பாடுகளும் நமது விலையேறப் பெற்ற தியாகம், ஜெபம் ஆகியவற்றிலிருந்து பிறக்க வேண்டும். **இரவு முழுவதுமான போராட்ட ஜெபம் அவன் வாழ்வில் மறக்க முடியாத ஒரு புதிய யுகத்தைத் தோற்றுவித்தது.** தேவன் தலையிட்டு ஏசாவின் மனநிலை, நடக்கை ஆகியவற்றை மாற்றி, யாக்கோபின் தன்மையையும் மாறுபடுத்தி, இரட்சித்து வாழ்க்கையை மாற்றி அமைத்தார்.

நமது தொந்தரவு பண்ணும் ஜெப காலங்கள் வைரத்தில் பொறிக்கப்பட்ட அச்சு போல கடினமான இடங்களில் பிரவேசித்து நமது குணாதிசயங்களை மாற்றி அமைக்கும். அக்காலங்கள் நம் வாழ்வில் விசேஷித்தவைகளும் ஞாபகக் கற்களுமாயிருக்கும்.

தொந்தரவு செய்வது என்பது ஜெபத்தின் ஒரு நிபந்தனை. நாம் குறிப்பிடும் விஷயங்களை வீணாகத் திருப்பிச் சொல்லுகிறவர்களாக அல்ல ஆனால் மிக அவசரமாக திருப்பிச் சொல்லுகிறவர்களாயிருக்க வேண்டும். சமயத்தைச் செலவிட அல்ல, நமது இருதயமும் ஆத்துமாவும் அதில் ஈடுபட வேண்டும். '**முழு விடாமுயற்சியுடன்**' நாம் ஜெபிக்க வேண்டும். ஜெபத்தினாலேதான் நாம் வாழுகிறோம். நமது விண்ணப்பங்களை அழுத்துவதால் அவற்றை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது சாக வேண்டும். யோவாஸ் தரையிலே மூன்று தரம் மட்டும் அடித்து விட்டு நிறுத்திய படியால் வெற்றியை இழந்தான் 2 ராஜா. 13:18,19.

எலியா தனது ஜெபத்தை முதல் தடவையோடு நிறுத்தியிருந்தால் அவனது பலவீன ஜெபத்திற்கு மழை பெய்திருக்க முடியாது (1ராஜா.18:42-45). தூங்கவேண்டிய நேரத்தில் யாக்கோபு போராடி ஜெபித்திராவிட்டால் ஏசாவோடு அடுத்த நாள் நல்ல முறையில் சந்தித்திருக்க முடியாது (ஆதி.32:24-30). அந்த சிரபோனிக்கேயா பெண் தாழ்மைப் படுத்தப்பட்டபோது அமைதியாக இருந்துவிட்டாளானால் அவளுடைய துக்கம் நிறைந்த இல்லம், அவளது மகள் குணமடைந்து சந்தோஷமடைந்திருக்க முடியாது.

சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள்

ஜெபத்திற்கு கிறிஸ்து அளிக்கும் குறிக்கோள் சோர்ந்து போகக்கூடாது என்பதாகும். அது விசுவாசத்தின் பரிசோதனையாகும். சோதனை கடுமையாகவும், நீண்டதாகவும், காத்திருக்கச் செய்வதாகவ ,மிருந்தால் பலன்களும் மகிமையானதாயிருக்கும்.

பழைய ஏற்பாடு பக்தர்கள் இவ்வித ஜெபத்தின் தேவையையும் நன்மைகளையும் போதித்திருக்கிறார்கள். ஜெபிக்கிறவர்கள் நம்பிக்கையில் உறுதியாகவும் ஜெபத்தில் விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். எப்படி காத்திருந்து அழுத்தத்தோடு உத்தமமாக தேவனை அண்டிச் சேரவேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும்.

ஆபிரகாம் நமக்கு ஒரு நல்ல மாதிரியை முன் வைத்திருக்கிறார். அவர் சோதோம் கொமோராவுக்காக தொடர்ந்து வேண்டிக்கொண்டார். மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக நாற்பது நாள் இரவும் பகலும் ஜெபித்து உபவாசித்து இவ்வித மான ஜெபத்தையும் அதன் வல்லமையையும் நமக்குக் கற்பித்தார். அவர் வெற்றியும் பெற்றார்.

இயேசு தமது போதனை மாதிரி மூலமாக பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட காத்திருந்து ஜெயிப்பதை நிறைவேற்றினார். தேவனுடைய ஒரே பேறான குமாரன் தமது பிதாவிடமிருந்து பரலோகம் விட்டு பூமி வந்தது பிதாவின் சித்தம் நிறைவேற்றப்படவே. ஜெபம் என்ற கட்டளையின் கீழ் ஆசீர்வாதங்கள் பெறப்பட்டன. அவர் விடாப்பிடியாய் ஜெபித்து தெய்வீக கடமைகளை நிறைவேற்றினார். அவரது இரவு பகலான ஜெபம் தான் அவரது மறுரூபத்திற்கு ஏதுவாயிருந்தது. முழுநாளும் அவர் வேலை செய்ய வல்லமையும் மனதுருக்கமும் ஜெபத்தின் மூலமாகவே கிடைத்தது. அந்த ஜெபம் அவரது மரணத்தினை வெற்றியாய் முடிசூட்டியது. ஜெபத்தின் மூலமாகவே தம்மை முற்றிலும் தேவசித்தத்திற்கு ஒப்படைக்க முடிந்தது.

சார்லஸ் ஸ்பர்ஜன் இவ்வாறு கூறியிருக்கிறார்: நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கேட்பது தேவ ராஜ்ஜியத்தின் சட்டம். '**கேளுங்கள் அப்பொழுது பெற்றுக் கொள்வீர்கள்**'. இந்த கட்டளை யாராலும் எப்போதும் மாற்றப்படக்கூடாதது. நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமது குடும்பத்தின் மூத்த சகோதரர். ஆனால் தேவன் அவரை சட்டத்திலிருந்து விடவில்லை. இந்தப் பகுதியைப் பாருங்கள்: யெகோவா குமாரனிடம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லுவது: "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங்.2:8) கேட்பதற்கு தெய்வீக தேவ குமாரன் கூட விடுபடக்கூடாதானால் நமக்கு அனுகூலமாக சட்டத்தை மாற்ற முடியாதே. ஏன் அப்படி? அப்படி விடுபட என்ன காரணம் காட்ட முடியும்? எந்த காரணமும் எனக்கு தென்படவில்லை.

தேவன் எலியாவை ஆசீர்வதித்து இஸ்ரவேலுக்கு மழையை அனுப்புவார். ஆனால் எலியா ஜெபம் பண்ண வேண்டும். தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேலரை கர்த்தர் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படிக்கு சாமுவேல் அதற்காக விண்ணப்பம் பண்ணவேண்டும் (1 சாமு.7:3-13). யூதர்கள் விடுவிக்கப்பட தானியேல் மன்றாட வேண்டும். தேவன் பவுலை ஆசீர்வதித்து தேசம் அவன் மூலமாக மனமாற்றமடைய வேண்டும். ஆனால் அதற்காக பவுல் ஜெபிக்க வேண்டும். அவர் இடைவிடாமல் ஜெபித்தார். அவருடைய நிருபங்கள் அவர் கேட்காமல் எதையும் எதிர்பார்க்கவில்லை என்பதை நிரூபிக்கின்றன. நான் உங்களிடம் கெஞ்சி கேட்பது, ஜெபத்தின் முக்கியத்தை அறிந்து நீங்கள் ஜெபத்தில் பெருக வேண்டும்.

போராடி ஜெபிக்காததால் நாம் தோல்வியடைகிறோம். அது ஒரு சேமிக்கப்பட்ட விசையாக நம்மில் இருக்க வேண்டும். இயேசுவும் விடாப்பிடியாக ஜெபிப்பதை போதித்தார். தேவனுடைய பாதபடியில் வரும் போது உத்தமமாய் இருப்பது அவசியம்.

அடிக்கடி ஆரம்ப நிலையிலேயே சோர்ந்து போய் விடுகிறோம். உறுதியாக பற்றிக் கொள்ள வேண்டிய இடத்தில் விட்டுவிடுகிறோம். நமது ஜெபங்கள் பெலவீனமாயிருக்கின்றன.

தொந்தரவு பண்ணும் ஜெபத்தை அதன் பிடிவாதத்தின் மூலம் தேவன் கேட்டு பதிலை மறுக்காதபடி அளிக்கிறார்.

யாக்கோபு கிறிஸ்தவர்களென்றும், கர்த்தருடைய சீஷர் என்றும் கூறிக் கொண்டும் ஜெபிக்காதவர்களைக் குறித்து, "...நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும் நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினால் உங்களுக்கு சித்திக்கிறதில்லை" என்கிறார்.

சிலர் ஜெபிப்பதே இல்லை. இன்னும் சிலர் ஜெபித்தாலும் சரியான விதத்தில் ஜெபிப்பதில்லை. "...தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்".

தகாதவிதமாய் என்பது என்ன? இச்சைகளை நிறைவேற்றும்படி தகாத விதமாய் ஜெபம் பண்ணுவதை ஆவியானவர் சுட்டிக்காண்பிக்கிறார். அதாவது மாம்சமானது சந்தோஷப்படவும், பழைய தீமை பலப்படவும் தவறாக ஜெபித்து வேதவசனத்தைச் சுட்டிக் காட்டி ஜெபம் கேட்கப்படும் என்கிறார்கள்.

ஆனால் அப்படியல்ல. தேவ நாம மகிமைக்காக நாம் ஜெபித்தால் அது தகாத விதமாகாது. "ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்' 1கொரி.10:31.

நமது தகுதியல்ல – அவரது தகுதியே!

இன்னொரு முக்கியமான குறிப்பு என்னவெனில் நமது தகுதிகளையெல்லாம் தூரமாக்கி, நமது ஜெபங்கள் கேட்கப்பட ஆண்டவராகிய இயேசுவின் தகுதியை அடிப்படையாக்க வேண்டும். அதையே புதியஏற்பாடு குறிப்பிடுகிறது. "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே" கொலோ.3:17; யோவா.15:16.

பாவி தனது தகுதியாலும் நற்பண்பாலும் பரலோகம் செல்ல முடியாது. ஆண்டவராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற நாமம் ஒன்றே தேவசமூகத்திற்கு விசுவாசத்தின் மூலம் எடுத்துச் செல்ல முடியும். எனவே தேவ பிள்ளைகளாகிய நாம் ஜெபத்தில் தேவசமூகத்தில் வரும் போது நாம் எண்ணிக்கொண்டிருக்கும் நமது சொந்த நற்பண்புகளையும் தகுதிகளையும் விலக்கிவைக்க வேண்டும்.

நம்மை நமக்குரியவர்களல்ல என நிராகரித்து இயேசுகிறிஸ்துவைப் பற்றிக் கொள்ள வேண்டும். உயிர்த்தெழுந்த இயேசுவோடு இணைந்தவர்களாக, அவரில் நம்மை மறைத்து, அதாவது கிறிஸ்துவை முன்நிறுத்தி நாம் பின்னே ஒளிந்து நின்று தேவனிடம் ஆண்டவராகிய இயேசுவின் தகுதி, நற்பண்பு ஆகியவைகளின் அடிப்படையில் கேட்கும் போது தேவன் பிரியமடைந்து அந்த ஜெபங்களைக் கேட்பார்.

நமது ஆறுதல் இங்கிருக்கிறது. பிதாவாகியதேவனிடமிருந்து ஆண்டவராகிய இயேசு எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர். ஏனெனில் இயேசு தமது பழுதற்ற

(6-ம் பக்கம் பார்க்க)

நமது ஜெபங்கள் பதிலை பெற்றுக்கொள்ள ஆதாரமாயிருப்பவை

The grounds upon which our prayers receive answers

George Muller (1805 - 1898)

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்; தேடுகிறவன்கண்டடைகிறான், தட்டுகிற வனுக்குத் திறக்கப்படும்" மத்.7:7,8.

இந்த வாக்குத்தத்தம் நமது அருமை ஆண்டவராகிய இயேசுவின் வாயிலிருந்து வந்த விலையேறப்பெற்ற ஒன்று. ஜெபத்தைக் குறித்து இது முழுமையானதும், விசாலமானதும், ஆழமானதும், விலையேறப் பெற்றதுமாயிருக்கிறது. ஜெபத்தைக் குறித்து இது ஒரு வாக்குத்தத்தமாகவுமிருக்கிறது. இதை, கொடுக்கப்பட்டிருப்பதைவிட நாம் விரும்புகிறபடி பெரிதாக்கிக் கொள்ளலாம்.

இந்த வசனத்தை குழந்தை போன்ற எளிமையோடு தேடி அதைப் பற்றிக் கொள்ள வேண்டும். தேவ வசனத்தைப் பற்றிக்கொள்ள **விசுவாசம்** வேண்டும். விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள வேத வசனத்தைப் பற்றிக் கொண்டு தேவன் சொல்லுவதை கேள்வி கேட்காமல் அதைச்சார்ந்துகொள்ள வேண்டும்.

அனேகர் விசுவாசம் ஆழமான உணர்ச்சிக்குள் இருப்பதாக எண்ணுகிறார்கள். இது மிகப்பெரிய தவறு. சிறு குழந்தை போன்ற எளிமையுடன் தேவ வசனம் சத்தியம் என ஏற்றுக்கொண்டு அதையே சார்ந்து, அவரது வார்த்தையின் படி தேவன் செயல்படுவாரென்று உறுதியாயிருப்பது தான் மிக உறுதியான விசுவாசம் 1தெச.2:13.

இவ்வாறு வேத வசனத்தை ஏற்றுக் கொண்டு அதைச் சார்ந்து வாழுபவர்கள் தான் விசுவாசத்தில் உறுதியானவர்கள். இது தொடரவேண்டும். வேத வசனத்தால் திருப்தியடைந்து அதையே எப்போதும் வெளிப்படுத்த வேண்டும்.

வேதவசனத்தை வேதவசனத்தோடு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்

மத்தேயு 7:7,8 வசனங்களிலுள்ள வாக்குத்தத்தத்தை இருதயத்தில் ஏற்றுக் கொண்டு, அதைப் பேசி, நமது மடியில் ஒரு நல்ல நண்பர் போல வைத்து, "என் தேவனும் பிதாவுமானவர் நிச்சயமாக இதன்படி செய்வார், அவரது வசனம் அவரது தூய குமாரன் இயேசுவால் சபைக்கு ஒரு வாக்குத்தத்தமாக அருளியிருக்கிறார்" என்று சொல்ல வேண்டும்.

இந்த வாக்குத்தத்த வசனம் விசாலமானதாகவும், முழுமையாகவும், ஆழமாகவும், விலையேறப் பெற்றதாகவும் இருந்தாலும் வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அதனால் கூடுதலான போதனைகளைப் பெற்று, இருதயங்கள் விசாலமாகி, நாம் நிலை நிறுத்தப்பட்டு. இந்த பகுதியைக் குறித்த தேவனுடைய கருத்தை தெளிவாக அறியலாம்.

எடுத்துக்காட்டாக யாக்கோபு4:3-ல் "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று, தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்" என்ற வசனத்தை விட்டுவிடக் கூடாது. இதை ஜெபத்தைக் குறித்து அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தோடு ஒப்பிடவேண்டும்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தூய்மையால் பூரண மன்றாட்டின் மூலம் அதைப் பெற்றார்.

"நீங்கள் கேளுங்கள் – நான் செய்வேன்"
யோவான் 14:14

இன்னொரு முக்கிய குறிப்பு என்னவென்றால் நாம் விசுவாசத்தைப் பயிற்சிப்பது தேவவல்லமையாலாகும். அந்த விசுவாசம் ஜெபத்திற்கு பதிலளிக்கிற அவரது **சித்தத்தில்** இருக்கிறது. மிகச்சில தேவபிள்ளைகள் மட்டுமே தேவவல்லமையைக் குறித்து கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால் சோதனை என்னவெனில் அடிக்கடி தேவசித்தத்தைக் குறித்து கேள்வி எழுப்பப் படுகிறது.

தேவன் தனது ஒரே பேரான குமாரனை கிருபையாக நமக்கு அளித்திருக்கிறார். அந்தக் கிருபையால் எல்லாவற்றையும் அருளிச்செய்ய அவர் ஆவலாயிருக்கிறார் ரோமர் 8:32.

அவரது வாக்கின் அடிப்படையில் நாம் இப்படிச் சொல்ல வேண்டும். "அவரது நாம மகிமைக்காக நான் கேட்கும் போது நிச்சயமாக அவர் தருவார்; நான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தகுதியின் அடிப்படையில் நிச்சயமாக கிறிஸ்துவின் பேரில் கிறிஸ்துவோடு நான் கேட்பதை அவர் கரத்திலிருந்து தருவார்".

இதை நான் என் அனுபவத்திலிருந்து உறுதிப்படுத்த முடியும். மேலும் மாற்கு 11:22-26 படிக்க.

"மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்தில் எவைகளைக் கேட்பீர்களோ, அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்" மத்.21:22.

இயேசு அவனை நோக்கி: "நீவிசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்றார் மாற்.9:23.

நீங்கள் ஜெபிக்கும்போது பெற்றுக் கொள்வோமென்று விசுவாசிக்கிறீர்களா? பதிலைப்பெற தேவனுடைய வல்லமை, சித்தம் இவற்றை விசுவாசத்துடன் செயல்படுத்துகிறீர்களா? அப்படியானால் வெற்றிக்கொள்வது நிச்சயம். இல்லையெனில் முதலாவது விசுவாசத்தை தேவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தேவமகிமைக்காக நாம் கேட்கிறவர்களாகவும், கிறிஸ்துவின் தகுதி, நற்பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் நாம் கேட்டாலும் விசுவாசத்தோடு கேட்டாலும் இன்னும் ஒன்று தேவை. நாம் அமைதியாக தேவன் பதிலளிக்கும் வரை தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

இங்குதான் அந்த இரகசியம் இருக்கிறது

தேவனை நான் அறிந்த நாட்களிலிருந்து தேவன் பதினாயிரக்கணக்கான ஜெபங்களுக்குப் பதில் உடனுடன் அளித்திருக்கிறார்.

ஆயிரக்கணக்கான ஜெபங்களுக்கு உடனுடன் பதில் கிடைத்தது. பல ஜெபங்களுக்கு பல நாட்கள் அல்லது பல வாரங்களுக்குப் பின் பதில் கிடைத்தது. சிலவற்றிற்கு மாதங்கள் கழித்தும் இன்னும் சிலவற்றிற்கு வருடங்கள் கழிந்தும் பதிலைப் பெற்றேன்.

தேவன் தமது சொந்த வழியின்படி கிரியை செய்கிறார். ஏனெனில் அவர் தேவன். அவர் என்றென்றும் தேவன். நாம் அவரது கிரியைகள். அவர் தமது விருப்பப்படி செயல்படுகிறார்.

நாம் அமைதியாக அவருடைய சமயத்திற்காகக் காத்திருக்கிறோமா? நமது வேண்டுதல்கள் அவரது சித்தத்திற்கு இசைவாக இருந்தால் நிச்சயமாக அவர் பதிலளிப்பார்.

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுப்பாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்று அறிந்திருக்கிறோம்" 1யோவா.5:14,15.

நான் இப்போது இரு நபர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். வருகிற நவம்பர் மாதம் 33 ஆண்டுகள் முடியப் போகிறது. எத்தனையோ ஜெபங்களுக்கு பதிலைப் பெற்ற நான் இவர்களது மனந்திரும்புதலுக்காக ஜெபித்தும் அவர்கள் மனம் மாறவில்லை. எனவே நாம் ஜெபிக்கும் போது தேவன் நமது விசுவாசத்தை மிக அதிகமாக எதிர்பார்க்கிறார். (இந்த இருமனிதர்களும் ஜார்ஜ் முல்லரின் மரணத்திற்குப் பின்பு இரட்சிக்கப்பட்டனர்)

எனது அன்பான நண்பர்களாகிய நீங்கள் பொறுமையோடு காத்திருக்கும்படி உங்களை உற்சாகப்படுத்த இதனை எழுதுகிறேன். கர்த்தருக்குக் காத்திருந்தால் ஆசீர்வாதங்கள் நிச்சயமாக வரும். எவ்வளவாகக் காத்திருக்கிறோமோ அவ்வளவாக இனிமையும், விலையேறப்பெற்றதும், நீண்டகாலமானதுமான ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

நேர்மையும் உத்தமமும்

நமது பலவீனங்கள், பொல்லாப்புகள், தவறுகள் ஆகியவற்றைப் பாராது தேவன் நமது ஜெபங்களுக்குப் பதிலளித்தாலும் அவர் நம்மிடம் நேர்மை, உத்தமம் ஆகியவற்றை எதிர்பார்க்கிறார். நாம் பாவத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் போது அவர் நமக்குச் செவிகொடுப்பதில்லை ஏசா.59:1,2; மாற்.11:22-26.

"என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்" (சங்.66:18). "அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" 1யோ.1:7,9

நாம் நேர்மையும் உத்தமமும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். இயற்கையான தீய தன்மைகளுக்கு எதிரான போராட்டம் நடக்கட்டும். நாம் பாவத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்க இடமளிக்கக்கூடாது. அவ்வாறு பாவத்துக்கு இடமளித்தால் ஜெபத்திற்குரிய பதிலைப் பெறுவது இயலாதது.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கு மிகவும் அதிகமாய் எபேசி.3:20

தேவனுக்குக் காத்திருக்க வேண்டும். அப்படிக் காத்திருந்து பெரிய காரியங்களைப் பெற்றுக்கொள்ள உங்களை உற்சாகப்படுத்துகிறேன். உங்கள் காத்திருக்குதலும் விசுவாசப் பயிற்சியும் வீண்போவதில்லை. இறுதியில் தேவன் நீங்கள் எதிர்பார்த்ததற்கு மிகவும் மேலாக பலனளிப்பார். நமது **மிகப் பெரிய எதிர்பார்ப்புக்கு மேலாக நாம் பெற்றுக் கொள்வோம்.**

"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்கு செய்ய வல்லவர்..." (எபேசி.3:20). "கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு" (சங்.27:14). "என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு, நான் நம்புகிறது அவராலே வரும்" (சங்.62:5). "கர்த்தருக்குக் காத்திருக்கிறேன், என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்" (சங்.130:5). "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள். வாலிபரும் இடறி விழுவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ, புது பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" (ஏசா.40:29-31). "தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும், தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்" (புலம்.3:25). "குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும்; அது பொய் சொல்லாது, அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும்; அது தாமதிப்பதில்லை" ஆப.2:3.

☆ ☆ ☆

ஒரு காலத்தில் நம்மிடத்திலிருந்த வல்லமை இப்போது நம்மிடத்தில் இல்லை. அதற்கான சாதாரண காரணம் யாதெனில் ஒரு காலத்தில் தேவனுடைய சமுகத்தில் நாம் முகங்குப்புற விழுந்து கிடந்து அதை செலவிட்டது போல இப்போது நாம் செய்யவில்லை.

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக (Net Banking) **காணிக்கை அனுப்பிய வாசகர்கள் உடனே எங்களுக்கு** Phone **பண்ணுங்கள் அல்லது** SMS or Whatsapp **அனுப்புங்கள்.**

Cell : **95432 21008**
Whatsapp : **9489740295**

ஜெபிக்கிற ஒரு ஆசாரியன்

A Priest that Prays

Dave Butts (1953 - 2022)

ஒரு ஆசாரியன் என்று நாம் சாதாரணமாக எண்ணிப்பார்க்கும் போது அவர் தேவனோடு விசேஷித்த தொடர்பு உடையவர் என்றும் மற்றவர்களுக்காக தேவனிடம் சேரக்கூடியவர் என்றும் எண்ணுகிறோம். இது தவறான கருத்தல்ல. ஆசாரியத்துவம் ஒரு குறிப்பிட்ட மற்றும் பயிற்சி பெற்ற மக்களுக்கு மட்டும் உரியதல்ல. வேதவாக்கியங்களின்படி இயேசு கிறிஸ்துவின் மூலம் ஒருவன் ஆசாரியனாயிருக்கிறான். "ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" *(1பேது.2:5)*. "நீங்களோ உங்களை அந்த காரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" *1பே.2:9.*

ஒரு ஆசாரியனுடைய எல்லா வாய்ப்புகளையும் பொறுப்புகளையும் தேவராஜ்யத்தில் நிறைவேற்ற ஆசாரியனாயிருப்பது எப்படி என்று தெரிந்து கொள்ள வேண்டும். இயேசுவும் ஒரு ஆசாரியரே, ஆனால் அவர் மிகப்பிரதான ஆசாரியர். எபிரேயருக்கு எழுதின நிருபம் இயேசுவின் ஆசாரியத்துவத்தை முக்கியப்படுத்துவதோடு தேவனுடைய வீட்டில் நம்முடைய இடத்தைக் கண்டு கொள்ளவும் ஏதுவாகிறது.

ஒரு ஆசாரியராக அவர் ஜெப ஊழியம் செய்தார். "இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்". "கிறிஸ்துவே மரித்தவர். அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" *(எபி.7:24,25; ரோ.8:34)*. தற்போது இயேசுவின் ஊழியம் ஜெபம் ஒன்றே. ஆசாரியனாக அவர் மன்றாடிக்கொண்டிருக்கிறார். அவர் நமக்காக ஜெபித்துக் கொண்டிருப்பது நமக்கு ஒரு நற்செய்தி.

முக்கியமாக நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் கிறிஸ்தவர்களாக நாம் அனைவரும் ஆசாரிய மன்றாட்டிற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். *1தீமோ.2:1-ல்* பவுல் நம்மை மன்றாட்டு ஜெபத்திற்காக அழைக்கிறார். அனைத்து பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்கும்படி *எபேசியர் 6:18* கூறுகிறது. இயேசுவுடன் சேர்ந்து அவர் இப்போது செய்யும் ஊழியமாகிய மன்றாடுதலில் ஆசாரியராக செயல்படுவோம்.

எபிரேயர் நிருப ஆக்கியோன் கீழ்க் குறிப்பிடும் பகுதி மூலமாக நம்மை உற்சாகப்படுத்துகிறார். "ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" (எபி.10:19-22). இப்பகுதி ஆசாரியன் எந்த சரியான இடத்திலிருந்து ஜெபிக்க வேண்டுமென்று காண்பிக்கிறது. அது மிக உன்னதமான பரிசுத்த ஸ்தலம். ஆசரிப்புக் கூடாரத்திலும் தேவாலயத்திலும் மகா பரிசுத்த ஸ்தலம் என்பது மிகமிகப் பரிசுத்தமானது. அங்குதான் யூதர்களின் மகாபிரதான ஆசாரியர்கள் வருடத்தில் ஒருமுறை பிரவேசித்து ஜெபித்து மக்களுக்காகப் பரிகாரம் செய்வார்கள். அது தேவ பிரசன்னம் தங்கியிருக்கும் ஸ்தலமாகும்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒவ்வொரு வருடமும் மகாபிரதான ஆசாரியன் தேவாலயத்தில் பிரவேசித்து மகாபரிசுத்த ஸ்தலத்தில் தேவனை சந்திப்பான். இந்த ஒரே ஒருநாள்தான் இந்த வாய்ப்பு அவனுக்கு, அதுவும் மகா பிரதான ஆசாரியனுக்கு மட்டுமே.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் ஆசாரியர்களாய் மகா பரிசுத்த ஸ்தலத்தில் அடிக்கடி பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெற்றோம். அவரது சன்னிதியில் வரும் போது நமது வேண்டுதல்களை அவருக்கு முன்பாக வைக்கிறோம். அனேக கிறிஸ்தவர்களுக்கு இந்த விலை மதிப்புள்ள பொறுப்பும் கனமும் அறியப்படாமலிருக்கிறது.

எபிரேயர் பத்தாம் அதிகாரத்தில் ஒரு ஆசாரியனுக்கு ஜெபத்தில் சரியான மனநிலை இருக்க வேண்டும் என்று பார்க்கிறோம். நாம் ஜெபிக்கும் போது நமக்கு உறுதியும் நிச்சயமும் வேண்டும். நாம் விசேஷித்தவர்கள் என்பதல்ல, ஆண்டவராகிய இயேசு விசேஷித்தவர். அவர் மூலமாகவே நாம் தேவ பிரசனத்திற்குள் நுழைகிறோம். நமது விண்ணப்பங்களும் மன்றாட்டுகளும் அழைக்கப்படுகின்றன. எபிரேயர் நிருபம் உத்தம இருதயத்தோடும் முழுமையான நம்பிக்கையோடும் அவரைக் கண்டடையலாம் என்கிறது. யாக்கோபு நிருப ஆக்கியோன் சொல்லும் போது நாம் அவரைக் கிட்டிச் சேர்ந்தால் அவரும் நம்மைக் கிட்டிச் சேருவார் என்கிறார். எனவே நாம் ஜெபிக்கும் போது நமது விசுவாசமும் உறுதியும் வளர வேண்டும்.

கர்த்தர் கவனிக்கிறார் என்றும் அவரது சித்தப்படி ஜெபித்தால் பதிலளிக்க இருக்கிறார் என்றும் நாம் பூரணமாய் நம்ப இயலும். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" 1யோ.5:14,15.

ஒரு ஆசாரியன் ஒரு சரியான மாதிரியைப் பின்பற்ற வேண்டும். இயேசு தான் பிரதான ஆசாரியரும், மன்றாடுகிற ஒரே மாதிரியாயிருக்கிறார். நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற கட்டளை பெற்றிருக்கிறோம். ஆண்டவராகிய இயேசுவின் சீடர்கள் அவரது ஜெபத்தால் கவரப்பட்டபடியால் அவரிடம் ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும்படி கேட்டார்கள். அவர் ஒரு மாதிரி பிரசங்கத்தைக் கற்று கொடுக்கவில்லை, ஒருமாதிரி ஜெபத்தைக் கற்றுக் கொடுத்தார். ஒரு விதமாகக் கூறினால் "இங்கே ஒரு வலிக்கோட்டைத் தந்திருக்கிறேன். உங்கள் ஜெபத்தில் இவைகளை உள்ளடக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் தேவ ராஜ்யத்தைக் குறித்த விஷயங்களில் கருத்தாயிருங்கள்" என்பதாம். அவர் கற்பித்தபடி நாம் ஜெபித்தால் மிக நன்றாக ஜெபிக்க முடியும்.

தேவனுடைய ஆசாரியர்களே, ஆண்டவர் உங்களை அழைக்கிறார். நீங்கள் மற்றவர்களுக்காக மன்றாடி அவருக்கு முன்பாக நின்று வேறுபட்டவர்களாகக் காணப்பட வேண்டும். அவருடைய வல்லமையை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். எண்ணாகம புத்தகத்தில் ஒரு நல்ல மாதிரியான ஆசாரிய மன்றாட்டைக் காணலாம். மோசே ஆரோன் என்பவர்களின் தலைமத்துவத்தைக் குறித்து மக்கள் முறுமுறுக்கிறார்கள். தேவன் கொள்ளை நோயை அனுப்பிய தால் மக்கள் கொல்லப்படுகிறார்கள். தூப கலசம் பரிசுத்தவான்களின் ஜெபத்தைக் குறிக்கிறது. "மோசே ஆரோனை நோக்கி: நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின் மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய், கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று என்றான். மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக் கொண்டு சபையின் நடுவில் ஓடினான்; ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது; அவன் தூபவர்க்கம் போட்டு ஜனங்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்து, செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது" எண்.16:46-48.

தேவனுடைய ஆசாரியர்களாக நாம் மரித்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவில் நிற்க வேண்டும். மன்றாட்டின் மூலம் தேவசன்னிதானத்தில் மக்களின் தேவைகளைக் கொண்டு வருகிறவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய அழைப்பு நாம் ஆசாரியர்களாக தேவ சத்தத்தைக் கேட்கும்படி சபைக்கு வருகிறது. நாம் ஜெபிப்போமாக.

ஜெபம் – Prayer

Andrew Murray

"நீயோ ஜெபம் பண்ணும் போது உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத் திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளி யரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" மத்.6:6.

ஆவிக்குரிய வாழ்வும் அதன் வளர்ச்சியும் ஜெபத்தைப் பெரிதும் சார்ந்தது. எனது வாழ்வு செழிப்பதும், அழிவதும் நான் எவ்வளவு அதிகமாக அல்லது குறைவாக ஜெபிக்கிறேனோ அதையே சார்ந்தது. நான் சந்தோஷமாக ஜெபிக்கிறேனா அல்லது கடமைக்காக ஜெபிக்கிறேனா, வசனத்தின்படி ஜெபிக் கிறேனா அல்லது என் விருப்பத் தின்படி ஜெபிக்கிறேனா என்பதை நான் சிந்திக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட வசனம் உண்மையாக ஜெபிப்ப தற்கு முக்கிய கருத்தை நமக்கு அளிக்கக் கூடியதாயிருக்கிறது.

தேவனோடு தனித்திருப்பது

இதுவே முதல் சிந்தனையாயிருக்க வேண்டும். உலகம், மக்கள் போன்றவை கதவுக்கு வெளியே இருக்க வேண்டும். எந்தத் தொந்தரவுமில்லாமல் நாம் தேவனோடு உறவாட வேண்டும். தேவன் தமது ஊழியக்காரர்களை கடந்த காலங் களில் சந்தித்த போது அவர்களோடு தனிமையில் உறவாடினார். இந்த சிந்தனை உங்களிலும் முதன்மை பெறட்டும். நானும் தேவனும் இந்த அறையில் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளு கிறோம். தேவன்எவ்வளவுஅருகாமையில் இருப்பதை உணருகிறீர்களோ அவ்வள வாக உங்கள் ஜெபமும் வலிமை பெறும்.

உங்கள் தந்தையின் பிரசன்னத்தில்

இது இரண்டாம் சிந்தனை. நீங்கள் உள்ளறைக்குள் வருவதற்குக் காரணம், உங்கள் பிதா அன்போடு அங்கு காத்திருப்பது தான். நீங்கள் குளிர்ந்து போயிருந்தாலும், பாவமுள்ளவர்களாயிருந்தாலும், நீங்கள் ஜெபிக்கக் கூடியவர்களா அல்லவா என்ற சந்தேகத்தோடிருந்தாலும் பிதாவிடம் வாருங்கள். ஏனெனில் அவர் உங்களுக் காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அவரது கண்களின் வெளிச்சத்திற்கடியில் உங்களை வைத்துக் கொள்ளுங்கள். அவரது உருக்கமான தந்தைக்குரிய அன்பு அதோடு உங்கள் விசுவாசம் இவற்றின் அடிப்படையில் ஜெபியுங்கள்.

பதில் கிடைக்கும் என்ற நிச்சயத்தோடு ஜெபியுங்கள்

இது மூன்றாவது சிந்தனை. ஆண்ட வராகிய இயேசு சொல்லுவதாவது: "உங்கள் பிதா வெளியரங்கமாக பதிலளிப்பார்". இந்த வசனம் ஆண்டவராகிய இயேசு நேர் மறையாக ஜெபத்திற்கான பதிலைக் குறித்து கூறியதாகும். அவரது வாக்குத் தத்தங்களைத் திரும்பிப் பாருங்கள். சங்கீத புஸ்தகத்தில் தேவ பிள்ளைகளின் ஜெப புத்தகமாக அதனை எழுதி, தேவன் ஜெபத்தைக் கேட்கிறவரென்றும், அதற் கான பதில்களைத் தருகிறவரென்றும் நிரூபித்திருக்கிறார்கள்.

ஜெபத்திற்கான பதிலைத் தடுக்கக் கூடிய அனேக காரியங்கள் உங்களில் இருக்கலாம். பதில் வருவதற்கான தாம தம் ஒரு ஆசீர்வாதமான சிறந்த கட்டுப் பாடு. அது நம்மை நாம் சோதித்து நாம் தவறுதலாக ஜெபிக்கிறோமா, நமது வாழ்வு நமது ஜெபத்தோடு ஒத்துப்போகி றதா? என்று ஆராய்ந்து பார்க்க ஏதுவா கிறது. விசுவாசத்தின் பரிசுத்தமான பயிற்சிக்கு வழிநடத்துகிறது. தேவனோடு நெருக்கமாகவும் அதிக விடாப்பிடியான தொடர்போடும் இருக்க இழுத்துச் செல்கிறது. நிச்சயமாக பதில் கிடைக்கும் என்ற உறுதி வல்லமையான ஜெபத்தின் இரகசிய மாகும். இதை நாம் எப்போதும் ஜெபத்தின் முக்கிய பகுதியாக வைத்துக் கொள்வோம். ஜெபித்துக் கொண்டி ருக்கும் போது இடையில் நிறுத்திவிட்டு இப்படிக் கேட்கலாம்: "நான் எதற்காக ஜெபிக்கி றேனோ அதைப் பெற்றுக் கொள்ளுகிறேன் என்று நான் விசுவாசிக்கிறேனோ?" உங்கள் விசுவாசம் பலனைப் பெற்றுக்கொள்ளுமட்டும் உறுதியாயிருக்கட்டும். உங்கள் விசுவாசத் தின்படியே உங்களுக்கு ஆகக்கடவது.

அன்பான இளம் கிறிஸ்தவர்களே, தேவனோடு இரகசியமாக சம்பாஷிப் பதில் கவனமாயிருங்கள். உங்கள் ஜீவன் தேவனுக்குள் கிறிஸ்துவில் மறைந் திருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஜெபத்தின் மூலம் அந்த நாளுக்குரிய விசுவாசத்தை பரத்திலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அனுதினமும் தேவனோடுள்ளதும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினு டையதுமான உறவை புதுப்பித்து அதில் பலப்படுங்கள். தேவன் நமது இரட்சிப்பும் நமது பெலனுமாயிருக்கிறார். கிறிஸ்துவே நமது ஜீவனும் நமது பரிசுத்தமுமாயிருக் கிறார். ஜீவனுள்ள தேவனோடுள்ள தனிப்பட்ட உறவில்தான் நமது ஆசீர் வாதம் இருக்கிறது.

கிறிஸ்தவனே, அதிகமாக ஜெபி, தொடர்ந்து ஜெபி, இடைவிடாமல் ஜெபம்பண்ணு. ஜெபிக்க ஆசையில்லாத வேளையிலும் தனி அறைக்குள் பிரவேசிப் பாயாக. அவரிடம் கொண்டு செல்ல எதுவுமில்லாமலிருந்தாலும் அன்போடும் விசுவாசத்தோடும் அவருக்கு முன்பாக உன்னை ஆயத்தப்படுத்து. இவ்விதமாகப் பிதாவிடம் வந்த நீ, அவர் முன்பாகத் தங்கியிருக்கிற நீ, ஏற்கெனவே நீ ஜெபித்து விட்டாயென அவர் புரிந்து கொள்வார். அவர் முன்பாகத் தரித்திருப்பதே ஆசீர்வாதத்தைத் தருகிறது என்ற நம்பிக் கையுடனிரு. பிதா கேட்கிறவர் மட்டு மல்ல, நம்மை இரகசியமாக பார்க்கிறவர். அவர் பகிரங்கமாகப் பதிலளிப்பார்.

"என் பிதாவே, நீர் உமது வசனத்தில் விசுவாசமுள்ள ஜெபம் கேட்கப் படுவதாக வாக்குப்பண்ணியிருக்கிறீர். நான் ஜெப ஆவியுடன் ஜெபிக்க அறிந்து கொள்ளும்படி உதவி செய்யும். உமது அற்புதமான தந்தையின் பாசத்தைக் கிருபையாக வெளிப்படுத்தியருளும். என்னைக் களங்கப் படுத்தும் பாவங்களை நான் உணர்ந்து அதன்மூலம் உமது பாதையைத் தடுக்கும் இரும்களை அகற்றி விட்டும். மன்றாடும் ஆவியை எனக்குத் தருவீராக. அதன் மூலம் எனது அறிவீனம், பலவீனம் போன்றவைகள் அகற்றப்பட்டு, நான் ஆசீர் வதிக்கப்பட்டும். உம்மில் விசுவாசத்தோடு ஜெபிக்கவும் முழுமையாக உம்மோடு உறவாடிருக்கவும் எனக்குப் போதியும். வழுவான ஜீவனுள்ள ஊழியை என்னில் வழங்கப்படுத்தும். அதன் மூலம் நான் விசுவாச ஜெபத்தின் மூலம் கேட்கிறவை களைப் பெற்றுக் கொள்ளட்டும், ஆமென்".

குறிப்பு: ஜெபத்தின் முக்கிய பகுதி விசுவாசம். இந்த விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபத்திற்காக சமயம் செலவு பண்ண வேண்டும். தேவனுக்கு முன்பாக அமைத லோடும் நம்பிக்கையோடும் நம்மை வைத்து அவரது பிரசன்னத்தை உணரவேண்டும். தேவனோடுள்ள உறவால் நமது ஆத்துமா சுத்திகரிக்கப்பட வேண்டும். தூய ஆவியான வர் நமக்குப் போதித்து அதன்மூலம் நாம் நம்பிக்கையுடன் அவர் வாக்குத்தத்தங் களைப் பற்றிக்கொள்ள உதவி செய்ய வேண்டும். உலக அறிவு, உடைமைகள், நண்பர்கள் மூலம் காலத்தை வீணாக்கக் கூடாது. அப்படியிருந்தால் போதுமான சமயத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும். தேவனோடு சமயத்தைச் செலவிடாமல் ஜெபிக்கக் கற்றுக் கொள்ளவும் தேவ வல்லமையையும், ஆசீர்வாதத்தையும் பெற முடியாது.

சிந்தனைக்கு: ஜெபம்

ஜெபம் மிக உயரியதும் சிறப்பான வெற்றியைத் தருவதும், தேவனோடு போராடும் ஒரு போராட்ட வீரரின் மனநிலையைத் தரும் ஒன்றாகும்.

ஜெபம் என்பது ஒரு சம்பவமல்ல, அது முக்கியமானது. அது காட்சி அல்ல அது ஒரு ஆர்வம். அது ஒரு தேவைமட்டுமல்ல இன்றியமையாதது.

ஜெபத்திற்குரிய நிபந்தனைகளில் தொந்தரவு செய்யும் திறமை ஒரு முக்கிய பகுதியாக இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

இடைவிடாமல் ஜெபிக்காவிடில் **ஜெபம்** பதில் தருவதில்லை. தொந்தரவு செய்வது என்பது பற்றிக்கொள்வதும், விடாது தொடர்வதும், காத்திருப்பதும் இளைப்படையாமலிருப்பதுமாகும்.

சிரொபெனிக்கேயா ஸ்திரீயின் **ஜெபம்** தொந்தரவு செய்தலின் இணை யற்ற வலிமையைக் காண்பிக்கிறது.

விரைவானதும் நிலையானதுமான வலுவை ஆத்துமாவுக்கு தொந்தரவு பண்ணும் **ஜெப**த்தைப் போல எதுவும் செய்வதில்லை.

Contact:
VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason